**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
-----
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, No.I, PERAMBALUR.**

| | | |
|---|---|---|
| Case Number | : | CC.No.141/2017 |
| Prosecution Witness | : | **அ.சா.18** |
| Name | : | **கீதா** |
| Father's/Husband Name: | : | க/பெ. வெங்கடாஜலபதி |
| Address : | : | விஜயபுரம், தொண்டமாந்துறை, வேப்பந்தட்டை தாலுகா |
| Age | : | 53/2021 |

<u>தேதி: 29/09/2021</u>

முதல் விசாரணை : <u>சாட்சி சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது.</u>

நான் தற்போது பெரம்பலூரில் வசித்து வருகிறேன். இதற்கு முன்பு நான் விஜயபுரத்தில் குடியிருந்து வந்தேன். எனக்கு தொண்டமாந்துறை கூட்டுறவு சொஸைட்டியில் கணக்கு இருந்தது. தற்போது இல்லை. ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் பணம் எடுப்பதற்கான 06/11/1991 மற்றும் 13/03/1997 தேதியிட்ட இந்த விண்ணப்ப படிவத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது அல்ல. என்னிடம் காண்பிக்கப்படும் கணக்கு எண்.593 க்கான பாஸ் புத்தகம் என்னுடையது தான். அது **அ.சா.ஆ.**37 முறைகேடு நடைபெற்றதாக என்னை கூட்டுறவு சங்கத்தின் விசாரணை அதிகாரி விசாரித்தார், என்னிடம் காண்பிக்கப்படும் இந்த வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த வாக்குமூலம் **அ.சா.ஆ.**38. இது சம்மந்தமாக என்னை காவல் துறையினர் விசாரித்தனர்.

**குறுக்கு விசாரணை**

கூட்டுறவு விசாரணை அதிகாரி எனக்கு அழைப்பாணை எதுவும் கொடுத்து விசாரித்தாரா என எனக்கு தற்போது எனக்கு நினைவில்லை.

அ.சா.ஆ.38-ல் என்ன சங்கதிகள் குறிப்பிடப்பட்டுள்ளது என தற்போது நினைவில்லை. படித்து பார்த்து என்னால் கூறமுடியும். அதில் என்ன எழுதப்பட்டுள்ளது என என் கணவருக்கு தான் தெரியும். என்னிடம் ஒரு கையொப்பம் வேண்டுமென எனது வீட்டில் வந்து வாங்கி கொண்டார்களா என எங்கு வைத்து வாங்கினார்கள் என எனக்கு தற்போது நினைவில்லை. எனது வங்கி கணக்கை எனது கணவர் தான் பார்த்துக் கொண்டார். காவல்துறையினர் என்னை விசாரித்தனர். அதாவது கையெழுத்து யாருடையது என என்னை விசாரித்தனர். (விசாரணை முடித்துக் கொள்ளப்பட்டது).

Taken down by / before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused/ pleader and admitted by the witness to be correct.

***Sd/-***

Judicial Magistrate No.I,
Perambalur.